## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2020

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 17 இன் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் சொத்துக்களாக இனங்காணப்படக்கூடிய 68 வர்த்தக அலகுகள் மற்றும் 57 சேவை அலகுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வாடகை வருமானம்/ குத்தகை வாடகை இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்து பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க மானியங்களைக் கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரசாங்க மானியங்களைக் கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 185.55 மில்லியன் பெறுமதியான கடன்பட்டோரிற்கான ஐயக்கடன்களுக்காக அதிகாரசபை 5 சதவீதத்தை வழங்கியிருந்த போதிலும் கடன்களின் அறவீட்டுத் தன்மையை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீடமைப்புத் திட்டங்களின் பெறவேண்டிய மீதிகளுக்காக முழு நிதியேற்பாடுகளையும் அதிகாரசபை வழங்கியிருந்தது. | கடன்பட்டோர் மீதிகளை மதிப்பீடு செய்த பின்னர் கடன்பட்டோரின் அறவீட்டுத் தன்மை இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிலாபம், தலவாக்கலை மற்றும் அநுராதபுர வீடமைப்பு செயற்திட்டங்களில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அதிகாரசபை 129 வீட்டு அலகுகளை உரிமையாளர்களுக்கு வழங்கியிருந்த போதிலும் மேற்படி வீடுகளின் ரூபா 39.81 மில்லியன் தொகையான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வீடமைப்பு இருப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. இதன் விளைவாக, வீடமைப்பு இருப்பின் பெறுமதி அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 300,752 தொகையான அட்டுறு செலவினம் மீளாய்வாண்டுக்கான செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவ் வீடமைப்பு செயற்திட்டத்திற்குச் சொந்தமான வீடுகள் அவ்வப்போது வழங்கப்பட்டிருந்த போதிலும் சில வீடுகள் கையிருப்பில் உள்ளன. ஆகையால் உடன்படிக்கைகள் இல்லாமல் வழங்கப்பட்ட வீடுகள் இன்னும் கணக்குகளில் உள்ளன. 2020 ஆம் ஆண்டிற்கான மேலதிக நேர கொடுப்பனவுகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையாளர்களுக்கு முறையாக உரிமைமாற்றம் செய்யப்பட்ட வீடுகள் வீடமைப்பு இருப்புக்களில் இருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். அனைத்து அட்டுறு செலவினங்களும் இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | 5 வீடமைப்பு செயற்திட்டங்களுக்குச் சொந்தமான சுமார் 5 ஏக்கர் பரப்பளவிலான காணிகளை சுவீகரிப்பதற்கும் அவ் வீடுகளின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து உரிமையாளர்களுக்கு உரிமை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்ட காணிகள் ஏற்கனவே கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. | நிறுவப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களுக்கு சொந்தமான காணிகளை சுவிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 500,000 கிரயத்திலான கணக்கீட்டு மென்பொருள் பொதி, கற்பனை சொத்துகளின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இக் சொத்துக்களின் கிரயம் 2020.12.31 இல் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டதால் அவற்றின் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ஹொரண வீடமைப்பு செயற்திட்டத்துடன் தொடர்புடைய மீளாய்வாண்டின் போது தீரப்பனவு செய்யப்பட்ட ரூபா 160,898 தொகையான அட்டுறு செலவினம் ஹொரண நடைமுறை வேலைக் கணக்கிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக அக் கணக்கு அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அட்டுறு செலவினங்களைக் கணக்கீடு செய்யும் போது அது வேறொரு கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது. | நடைமுறை வேலை பெறுமதியை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறான ரூபா 161,000 தொகையான அட்டுறு சட்டச் செலவினங்கள் மீளாய்வாண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்ட போதிலும் அது அட்டுறு செலவினக் கணக்கில் சீர்செய்யப்படுவதற்குப் பதிலாக சட்டச் செலவினக் கணக்கில் சீர்செய்யப்பட்டிருந்தது. ஆகையால் அந்த ஆண்டின் சட்டச் செலவினங்கள் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறான பதிவை சீர்செய்வதன் மூலம் சட்ட செலவின கணக்கிற்கான சீராக்கத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுக்கான செலவினத்தை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்தச் சொத்துக்கள் இனங்காணப்படாததால், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 717,110 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டில் அச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிக் கூற்றுக்களில் அச் சொத்துக்கள் காட்டப்படாததன் விளைவாக, சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வை நடாத்தும் போது, அனைத்து சொத்துக்களும் இனங்காணப்பட்டிருந்தன. ஆகையால் சொத்து மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் அனைத்து சொத்துக்களும் இனங்காணப்பட்டிருந்தன. | அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட 2019 மே 22 ஆம் திகதிய அமப/19/1250/122/046 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் ஹொரண வீடமைப்பு செயற்திட்டத்தில் அதிகாரசபையினால் ரூபா 8.79 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை தொடரும் பொருட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்திற்காக அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட கிரயம் அதிகாரசபையின் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நடைமுறை வேலையின் பெறுமதி அத் | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட நடைமுறை வேலை பெறுமதியை அதிகாரசபையின் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.5 அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் தன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 16(3) ஆம் உபபிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டியதுடன் இது திரட்டிய நிதியத்திலிருந்து தவணை அடிப்படையில் அதிகாரசபையால் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அதிகாரசபையால் எந்தவொரு மூலதனமும் பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் தொடர்ச்சியாக கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக திறைசேரிக்கு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. | மூலதனத்தை அதிகாரசபைக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் அதற்கான சட்டப் பிரிவை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 16(ஊ) உபபிரிவின் பிரகாரம் குறைந்த வருமானம் கொண்ட வீடமைப்பு செயற்திட்டங்களில் முதலீடு செய்த புறப்பட்டி டெவலெப்பேர்ஸ்ஸிடமிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபைால் சேகரிக்கப்படும் சேவைக் கட்டணங்கள் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 14 இல் மேற்கொள்ளப்பட்ட 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சேவைக் கட்டணங்கள் சேகரிக்கப்படுதல் நிறுத்தப்பட்டிருந்தது. இதனால், அதிகாரசபை அதனது முக்கிய வருமான மூலத்தை இழந்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சட்டத்தின் பிரகாரம் பெறவேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு அல்லது சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பரந்த வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் பெறவேண்டிய கடன் தவணைகளின் மொத்த பெறுமதி ரூபா 28,185,096 தொகையானதுடன் 1 தொடக்கம் 2 ஆண்டுகள், 2 தொடக்கம் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முறையே ரூபா 6,658,702, ரூபா 11,059,074 மற்றும் ரூபா 2,059,884 தொகையான மீதிகள் நிலுவையாக காணப்பட்டன. அத்துடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் நிலுவையாக உள்ள கடன் தவணைகள் ரூபா 12,776,392 தொகையாகும். அத் தொகையில், 1-2 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட பெறவேண்டிய கடன் தவணை மீதிகள் ரூபா 3,270,671 தொகையாகவும், 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 4,894,813 தொகையாகவும் காணப்பட்டன. | கடன்களை அறவீடு செய்வதற்கு தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கு தனியான பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆகையால் பின்தொடர் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் கடன் அறவீட்டு செயன்முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் அதிகாரசபை அதனது கவனத்தை ஈர்த்துள்ளது. | பெறவேண்டிய கடன்களை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 4 வீடமைப்பு திட்டங்களிலிருந்து விற்பனை அடிப்படையில் உரிமைமாற்றப்பட்ட வீடுகளிலிருந்து பெறவேண்டிய மொத்த கடன் தவணைகள் ரூபா 43,480,329 தொகையாகும். அப் பெற வேண்டியவைகளில், 02 முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முறையே ரூபா 13,364,899 மற்றும் ரூபா 19,217,258 | கடன்களை அறவீடு செய்வதற்கு தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கு தனியான பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆகையால் பின்தொடர் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் கடன் அறவீட்டு செயன்முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் அதிகாரசபை அதனது கவனத்தை ஈர்த்துள்ளது. | பெறவேண்டிய கடன்களை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான மீதிகள் பெற வேண்டியவையாக காணப்பட்டன. அத்துடன், இடமாற்ற அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட வீடுகளுக்கான நிலுவை வாடகை ரூபா 11,884,936 தொகையாகும். அத் தொகையில், 02-05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பெறவேண்டிய மீதிகள் ரூபா 3,171,868 தொகையாகவும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக பெற வேண்டிய வாடகை ரூபா 5,721,850 தொகையாகவும் காணப்பட்டன. | | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் அகுலன வீடமைப்புத் திட்டத்திலிருந்து பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 60,881,263 தொகையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 206,804 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | கடன்களை அறவீடு செய்வதற்கு தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கு தனியான பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆகையால் பின்தொடர் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் கடன் அறவீட்டு செயன்முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் அதிகாரசபை அதனது கவனத்தை ஈர்த்துள்ளது. | பெறவேண்டிய கடன்களை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட தபால் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய இடர்கடன் மீதிகள் ரூபா 615,298 தொகையானதுடன் அந்தத் தொகையில் ரூபா 385,889 மற்றும் ரூபா 229,408 தொகைகள் முறையே 1 முதல் 2 ஆண்டுகள் மற்றும் 2 முதல் 5 ஆண்டுகளிற்கு இடையே பெறவேண்டியவையாக காணப்பட்டன. அதிகாரசபை மிகுதியாகவுள்ள ரூபா 271,490 மீதியை 2021 யூலை வரை அறவீடு செய்வதற்கு தவறியிருந்தது. மேலும், அதிகாரசபையின் உத்தியோகத்தர்களிடமிருந்து | நிலுவையாக இருந்த ரூபா 615,298 தொகையான மீதியில் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. கடன் மீதிகளை பிணைதாரரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நிலுவையாக உள்ள கடன் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் அவர்களது கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது. | பதவியணியினர் கடன்களை பிணைதாரரிடமிருந்தேனும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பெறவேண்டிய வீடமைப்பு கடன்கள் ரூபா 1,241,632 தொகையானதுடன் அத் தொகையில் ரூபா 873,769 தொகை 2021 யூலை வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 124,842 தொகையான 8 செயற்திட்டங்களுக்காக பெறப்பட்ட சேவைகளுக்காக செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 922,276 வேறொரு தொகை 2 ஆண்டுகளுக்கும் மேலாக 2021 யூலை வரை தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதிகளுக்குள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாததன் காரணமாகவும் கண்காணிப்பு செயன்முறையில் உள்ள குறைபாடுகளாலும், அந் நிறுத்திவைத்தல் பணத்தைத் தீர்ப்பனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கு பொறுப்புக்கள் ஏதும் காணப்படாவிட்டால் அவற்றை வருமானத்திற்கு மீண்டும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்திருக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,344,641 தொகையான நிறுத்தி வைத்தல் பணத்தில் 2-5 ஆண்டுகளுக்கு இடையே தீர்ப்பனவு செய்யப்படாத மீதி ரூபா 922,276 தொகையானதுடன் 5 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்ப்பனவு செய்யப்படாத மீதி ரூபா 124,842 தொகையாகும். | பட்டியலிடப்பட்ட காலப்பகுதிகளுக்குள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாததன் காரணமாகவும் கண்காணிப்பு செயன்முறையில் உள்ள குறைபாடுகளாலும், அந் நிறுத்திவைத்தல் பணத்தைத் தீர்ப்பனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கு பொறுப்புக்கள் ஏதும் காணப்படாவிட்டால் அவற்றை வருமானத்திற்கு மீண்டும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்திருக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 3.47 மில்லியன் தொகையான தீர்ப்பனவு செய்யப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்களில் ரூபா 3.44 மில்லியன் தொகை 1-5 ஆண்டுகளுக்கு இடையே தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அத் தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் 100% பௌதீக செயன்முன்னேற்றத்தை அடைந்திருக்காத செயற்திட்டத்துடன் தொடர்புடையவை. | அந்த முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு மேலும் பொறுப்பு காணப்படாவிட்டால் அவற்றை வருமானத்திற்கு மீண்டும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | (i) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் | நகர அபிவிருத்திக்கான தேசியக் கொள்கையைத் தயாரித்து அத்தகைய கொள்கையை அமுல்ப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் 12 வருடங்கள் கடந்த பின்னரும் அதிகாரசபை அத்தகைய தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்து அமுல்ப்படுத்தத் தவறியுள்ளது. அத்துடன் சட்டத்தின் 15(அ) பிரிவின் பிரகாரம் நகர குடியிருப்புக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு அத்தகைய குடியிருப்புக்களின் தகவல்தொடர்பு மூலம் பெறப்படும் முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயல் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகாரசபை உருவாக்கி, செயற்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், கடந்த 12 வருட காலப்பகுதியில் இவ்வாறான பங்குபற்றல் அபிவிருத்தி செயலிகளை அமுல்ப்படுத்துவதற்கு அதிகாரசபை தவறிவிட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதிகாரசபை சட்டத்தின் நோக்கங்களை பின்பற்றுதல் வேண்டும். |
| | (ii) | சட்டத்தின் 10 ஆம் பிரிவு | சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபை 2017 ஏப்ரல் அளவில் தலைவர் ஒருவரைக் கொண்ட 14 உறுப்பினர்களுக்கும் குறைவானவர்களுடன் ஆலோசனைக் குழுவொன்றை நியமித்திருந்தது, எனினும், | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதிகாரசபை சட்டத்தின் நோக்கங்களை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரசபையின் முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயல்நடவடிக்கை திட்டங்கள் போன்ற அதிகாரசபையின் நோக்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள், மீளாய்வாண்டின் இறுதிவரை குழுவால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி. 104 | நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டவுடன், நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை கண்டறிவதற்கும் பொறுப்பை நிர்ணயிப்பதற்கும் விசாரணைகள் தொடங்கப்பட வேண்டும். எனினும். ரூபா 115,000 பெறுமதியான பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் அதிகாரசபை நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தவறவிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 371(2)(ஆ) | 13 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 133,900 தொகையான முற்பணங்கள் விரும்பிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் உத்தியோகத்தர்கள் முற்பணத்தை வைத்திருந்த பின்னர் மீண்டும் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. | உபகட்டுநிதிகளை தாமதமின்றி தீர்ப்பனவு செய்யுமாறு அனைத்து பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொற்றுநோய் நிலைமை காரணமாக நடைமுறையில் தாமதம் ஏற்பட்டது. | முற்பணங்கள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாவிட்டால் உடனடியாக அந்த முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 386(7) | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் காசோலைகளின் அடியிதழ்சேர் புத்தகங்களில் இணைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 1,113,920 தொகையான 3 | காணாமல் போன காசோலைகள் இனங்காணப்பட்ட பின்னர் அது குறித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக மேற்படி நடைமுறைகளை அதிகாரசபை பின்பற்றியிருக்கவில்லை. | | |
| (iv) | நி.பி. 394(ஆ) | காசோலையொன்று இரத்து செய்யப்பட்டு புதிய காசோலை வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் அக் காசோலைகள் இரத்து செய்யப்பட்ட விபரங்கள் காசுப் புத்தகம் மற்றும் தொடர்புடைய வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இரத்து செய்யப்பட்ட ரூபா 1,163,181 தொகையான 5 காசோலைகள் தொடர்பாக மேற்படி நடைமுறைகளை அதிகாரசபை பின்பற்றியிருக்கவில்லை. | தவறவிடப்பட்ட இரத்து செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக உரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் குறிப்புக்களை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நி.பி. 756(5)(ஆ) | பொருள் மெய்மையாய்வின் போது T மற்றும் A 66 படிவங்கள் பொருட்களின் மெய்மையாய்வை அறிக்கையிடுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் பொது 47 படிவம் பயன்படுத்தப்படாத பொருட்களை அறிக்கையிடுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், அதிகாரசபை அந்த படிவங்களை வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கு பயன்படுத்தியிருக்கவில்லை. இதன் விளைவாக, பொருட்களின் மேலதிகங்கள் மற்றும் பற்றாக்குறைகளை இனங்காண்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பொருள் மெய்மையாய்விற்கு உரிய படிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (vi) | நி.பி. 770 | இப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அரச நிறுவனமொன்றின் உத்தியோகத்தர்களை வேறொரு பொது நிறுவனத்திற்கு நியமிக்கக் கூடாத போதிலும் அத்தகைய அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் செயற்திட்டம் ஒன்றிற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக ரூபா 248,384 கூட்டுமொத்த தொகை அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், 2021 ஏப்ரல் 01 இல் அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் அவர்களுக்கான மாற்று உத்தியோகத்தர்களை கொண்டிருக்காமல் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் கேள்விக்குரியதாக உள்ளது. | உத்தியோகத்தர்களை ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கும் போது இது அந்தந்த பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | உத்தியோகத்தர்களை ஏனைய செயற்பாடுகள் அல்லது நிறுவனங்களுக்கு விடுவிக்கும் போது சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளும் தாபன விதிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளும் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கைகள் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் பொது படிவம் 287 இல் சொத்துப் பதிவேடொன்றை அதிகாரசபை பேணியிருக்கவில்லை. | அதிகாரசபையானது அனைத்து விபரங்களையும் உள்ளடக்குவதன் மூலம் கணினிமயப்படுத்தப்பட்ட முறைமையில் சொத்துப் பதிவேட்டைப் பேணியிருந்ததுடன் அதிகாரசபையால் அச்சிடப்பட்ட பிரதியொன்றும் பேணப்பட்டிருந்தது. | சொத்துப் பதிவேடு சரியான முறையில் பேணப்பட வேண்டும். |
| (உ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் 2.3.1 (ஆ) பந்தி | நிர்மாண வேலைகள் தடையின்றி அமுல்ப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய தேவைப்பாடுகள், பெறுகை | லுனவ வீடமைப்பு செயற்திட்டத்திற்குச் சொந்தமான காணி 2021 ஏப்ரல் 07 இல் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. கொடுப்பனவுகளை | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை தொடங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகளைக் குறிப்பிடுவதற்கு முன்னர் பெறுகை நிறுவனத்தால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் லுனவ வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தி செய்திருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு உடன்படிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,170,456 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,282,734 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 8,112,278 தொகையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மனித வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான திறைசேரி மானியங்கள் குறைவடைந்தமை இந் நிலைமைக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினங்களுக்கான திறைசேரி மானியம் ரூபா 24 மில்லியன் அல்லது 16 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் கட்டிடங்களின் பழுதுபார்ப்புச் செலவினங்கள் 218 சதவீதத்தாலும், ஏனைய செலவினங்கள் (வழங்கல்கள்) 158 சதவீதத்தாலும், காகிதாதி செலவினங்கள் 51 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன, அவ்வாறே மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியம் தவிர அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 180 மில்லியன் குறைந்த பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய மிகை விகிதம் 79 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் மீண்டெழும் செலவினங்கள் மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கான திறைசேரி நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல் 64.6 சதவீதத்தினால் குறைவடைந்தமை அந் நிலைமைக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சாதகமான நிதி முகாமைத்துவ நடைமுறையை அமுல்ப்படுத்தாததன் காரணமாக, அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்கில் ஏறத்தாழ ரூபா 42 மில்லியன் தொகை விளைவற்றிருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான | பெறப்பட்ட திறைசேரி மானியங்கள் வங்கி நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்டன. பட்டியலிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் அல்லது பணிகளை திட்டமிட்ட காலப்பகுதியினுள் அமுல்ப்படுத்தாததன் காரணமாக கணக்குகளில் மேலதிகமான | வருமானம் ஈட்டும் நோக்கில் குறைந்த பட்சம் குறுங்கால முதலீடுகளில் மேலதிக நிதிகளை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏறத்தாழ ரூபா 3.7 மில்லியன் வட்டி வருமானம் அதிகாரசபையால் இழக்கப்பட்டது. | வங்கி மீதி காணப்பட்ட போதிலும் தீர்ப்பனவு செய்யப்படாத விலைப்பட்டியல்கள் உடனடி கொடுப்பனவுகளிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆகையால், திறைசேரி நிதிகளை சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்வது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மேலதிக நிதிகள் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | |

### 3.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு அமைச்சரவையால் ரூபா 94.81 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந் நோக்கத்திற்காக ரூபா 20.83 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டதுடன் அது தொடர்பான எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | திறைசேரியால் வழங்கப்படும் வருடாந்த நிதியேற்பாடுகள் அதிகாரசபையின் அதிகார எல்லையின் கீழ் வராத திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சை தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சௌருபுர, துருஎதுருகம, தலவாக்கலை மற்றும் ரஜகம வீடமைப்பு செயற்திட்டங்களில் 45 வீடுகள் மற்றும் 3 கடைகளில் வெளிநபர்கள், பயனாளிகள் அல்லாதவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும், அந் நபர்களை அகற்றுவதற்கு அதிகாரசபை | சௌருபுர மற்றும் துருஎதுருகம வீடமைப்புத் திட்டங்களில் வாடகைக்கு விடப்பட்ட வீடுகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் நோக்கங்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மாத்திரமே சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்படாத நபர்களால் சொத்துகளைப் பயன்படுத்துவதற்கு |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | உரிய நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | லுனவ குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டத்தின் திறப்பு விழாவிற்காக அதிகாரசபையினால் ரூபா 4.03 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்கான நிதியேற்பாடு வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அச் செலவினம் அச் செயற்திட்டத்தின் நடைமுறைவேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திறப்பு விழாவுக்கான நிர்வாகச் செலவினத்தை கடன் சேகரிப்பு நிதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் தீர்மானித்திருந்ததுடன் அதற்கான அங்கீகாரத்தை பணிப்பாளர் சபை வழங்கியிருந்த போதிலும் நிலையான வருமானத்தைப் பயன்படுத்தி நிதியம் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்தது. நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்கு அந் நிதிகள் பயன்படுத்தப்படுகிறது. | திறப்பு விழாவிற்கு சிக்கனமற்ற செலவினங்கள் மேற்கொள்ளப்படக்கூடாது. |

### 3.4 ஒப்பந்த நடவடிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 14.19 மில்லியன் கிரயத்திலான சௌருபுர வீடமைப்புத் தொகுதியின் நலன்புரி கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் ரூபா 5.85 மில்லியன் பெறுமதியான வேலைகள் பூர்த்தியடைந்த பின்னரே கைவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதி வரை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 2.26 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அதிகாரசபையால் அறவீடு செய்ய முடியாதிருந்தது. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை இந் நிலைமைக்கு நேரடியாக பங்களித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சஹஸ்புர வீடமைப்புத் திட்டத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை ஒப்பந்ததாரரிடமிருந்து புனரமைப்புப் | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஒப்பந்த பணிகளில் உள்ள குறைபாடுகளை சீர்செய்த பின்னர் முற்பணங்களை தீர்ப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளில் ஏற்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. அத்துடன், ஒப்பந்ததாரருக்கு மேலும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 8.80 மில்லியன் தொகையும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 பதவியணி நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 171 ஆகவும் அத் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 103 ஆகவும் காணப்பட்டன. இதனால், 68 வெற்றிடங்களும், 03 மேலதிக பதவியணியினரும் அதிகாரசபையின் பதவியணியினரில் காணப்பட்டனர். | கருத்துரை வழங்கப்படவில்லை. | வெற்றிடங்கள் இயன்றளவு விரைவாக நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை பழைய வடிவத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததால், 2019 மே 22 ஆம் திகதிய டிஎம்எஸ்/1523(வீஓஎல்-1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திலிருந்தான புதிய படிவத்தின் பிரகாரம் நடைமுறையை நாளதுவரையாக்குவதற்கு அறிவுறுத்தப்பட்டது. எனினும், அத் தேவைப்பாடு 2021 யூலை வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய படிவங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பொறுப்பான | கிடைக்கக்கூடிய முன்னைய 3 ஆண்டுகளின் பௌதீக மற்றும் மனித வளங்கள், செயற்பாட்டு பெறுபேறுகளின் செயன்முன்னேற்றம் போன்றவற்றை உள்ளடக்கி தற்போதைய கூட்டிணைந்த திட்டம் (2021-2025) தற்போதுள்ள புதிய 01/2014 | திறைசேரி மற்றும் அமைச்சால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களை உள்ளடக்காமல் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது, | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பாய்ச்சல் செயற்பாடுகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | (i) நகர குடியிருப்பாளர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை கண்டறிவது தொடர்பான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல். | (i) அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கும் போது சமூக ஆய்வுகளின் தகவல்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | |
| | (ii) தேசிய அளவிலான கடன் திட்டங்களை அமுல்ப்படுத்துதல். | (ii) நாட்டின் நகர்ப்புறங்களில் நிலையான வீட்டு இருப்புக்களை அதிகரிக்கும் நோக்கில், பாதி பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் சிதைவடைந்த வீடுகளை பூர்த்தி செய்வதற்காக, கூட்டிணைந்த திட்டத்திற்கு ‘‘சதுது பவ்லக் சௌபாக்யமத் நெவசக்’’ கடன் நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் குறைந்த வருமானம் கொண்ட நகர்ப்புற குடியிருப்பாளர்ளின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை அதிகரிப்பதற்காக அதிகாரசபையால் பௌதீக வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் | 2020 ஆம் ஆண்டு அமுல்ப்படுத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் ‘‘திரிய நிவாச’’ பௌதீக வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந் நிகழ்ச்சித்திட்டத்தின் | செயல்நடவடிக்கைத் திட்டம் யதார்த்தமான முறையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் எந்தவொரு பௌதீக வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 06 மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்த்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கீழ் தலவாக்கலை வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | |
| (ஆ) | சிலாபம் மற்றும் தலவாக்கலை வீடமைப்புத் திட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சிலாபம் வீடமைப்புத் திட்டத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக உளளக வருமானத்தில் இருந்து ரூபா 4.35 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறப்பட்ட நிதியேற்பாட்டில் இருந்து தலவாக்கலை வீடமைப்புத் திட்டத்திற்கு ரூபா 2.00 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டம் யதார்த்தமான முறையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளக கணக்காய்வாளர் பதவி மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளில் அந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், உள்ளக கணக்காய்வு பிரிவை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் மாத்திரமே அந்தப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு பகுதியாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 இன் ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனமும் அவற்றின் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காக 02 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மாத்திரமே இனங்காணப்பட்டுள்ளதுடன் அவ் இலக்குகளின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு தேவையான செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2025 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான இலக்கு I (வறுமை ஒழிப்பு) மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு II (நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்) நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை எவ்வாறு அடைந்துகொள்வது என்பன இனங்காணப்படுவதுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டு அவை 2025 ஆம் ஆண்டளவில் அமுல்ப்படுத்தப்படும்.<br><br>நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பை நடாத்துவதன் மூலம் குறைந்த வருமானம் பெறுகின்ற நகர்ப்புற சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அந்தத் தகவல்களைப் பயன்படுத்தி, 2030 இன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்ட பின்னர் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.5 தீர்வுகாணப்படாத கணக்காய்வு பந்திகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அகுலான வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 1,179,062,714 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக எந்தவொரு | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதன் விளைவு மற்றும் விபரங்களை விளக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கை தீர்மானமும் எடுக்கப்படாமல் அக் கிரயத்தில் ரூபா 700,074,056 தொகை வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 478,988,658 தொகை மாத்திரமே அதிகாரசபையின் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நடைமுறையல்லா சொத்துக்கள் ரூபா 684,298,437 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | அதிகாரசபையின் அலுவலகக் கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,891,911 தொகை தீர்ப்பனவு செய்யப்படாமல் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உரிய கூட்டுத்தாபனத்திடமிருந்து வினவப்பட்ட பின்னர் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |